# இலக்கியத்தில் இருந்து உத்வேகம்; ஜனாதிபதி முர்மு பெருமிதம்

**புதுடில்லி, மே 31 –**

மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சாகித்ய அகாடமி சார்பில், 'இலக்கியத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்' என்ற தலைப்பில் இலக்கிய மாநாடு, ஜனாதிபதி மாளிகையில் நடந்தது.

நாடு முழுவதிலுமிருந்து எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியச் சிந்தனையாளர்கள் பங்கேற்றனர். ஜனாதிபதி திரவுபதி முர்மு நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

அவர் பேசுகையில், ''இந்த நாட்டின் மண்ணில் எங்கிருந்தாலும், ஜகன்நாத் புரி வளாகத்தில் இருப்பதைப்போல நன்றியுள்ளவனாக இருப்பேன்'' என்ற ஒடிஷாவை சேர்ந்த உத்கல்மணி கோபபந்து தாசின் வரிகளையும், சமூகத்தை ஒன்றிணைக்கும் சக்திக்கு, வால்மீகி ராமாயணத்தில் இருந்து ராமபிரானின் வாழ்க்கை வரலாற்றையும் மேற்கோள் காட்டி பேசினார். அவரது உரையில், ''சாமானிய மக்கள் இலக்கியத்திலிருந்து உத்வேகம் பெறுவதுடன், அதிலிருந்து தங்களது லட்சியங்களை அடைய பாடுபட வேண்டும். இன்றைய இலக்கியம் ஒருவரின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அதனை போதனை இலக்கியம் என்று அழைக்க முடியாது'' என்றார்.

மத்திய சுற்றுலா, கலாச்சாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், ''இலக்கியம் மாற்றமடைந்து வருகிறதா? என்று கேள்வி எழுப்புவதை விட, சமூகம் எவ்வாறு மாறிவிட்டது என்பதை கருத்தில் கொள்வது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்'' என்றார்.

மாலை 5:30 மணிக்கு, 'நெஞ்சிலிருந்து நேரடியாக' என்ற தலைப்பில் கவியரங்கம் நடந்தது. இதில் இந்தியாவின் பல்வேறு மொழிகளைக் கொண்ட கவிஞர்கள் பங்கேற்றனர். அதில் தமிழகத்தில் இருந்து கவிஞர் ரவிசுப்ரமணியன் பங்கேற்று கவிதை வாசித்தார். சாகித்ய அகாடமி செயலாளர் டாக்டர் சீனிவாசராவ் கவிஞர்களுக்கு பொன்னாடை வழங்கி கவுரவித்தார்.



ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் தொடங்கிய இலக்கிய மாநாட்டில் பங்கேற்ற எழுத்தாளர்கள், கவிஞர்களுடன் ஜனாதிபதி திரவுபதி முர்மு.